**தலைப்பு – 171 – உயர் கல்வி அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013 ஆம் ஆண்டு**

---

இவ்அறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

1 ஆவது பகுதி- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

2 ஆவது பகுதி- ஒவ்வொரு தலைப்பிற்கும் உரிய விபரமான அறிக்கை

## I ஆவது பகுதி

**உயர் கல்வி அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் சம்பந்தமான சுருக்கமான அறிக்கை**

---

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்**

| தலைப்பு | திணைக்களம் |
|---|---|
| 214 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு |

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடுகள் ரூபா 31,619,141,503 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் இதில் ரூபா 26,377,590,135 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சு மற்றும் ஒவ்வொரு திணைக்களத்தின் தேறிய ஏற்பாட்டில் சேமிப்பு முறையே ரூபா 1,153,456,368 மற்றும் ரூபா 4,088,095,000 தொகை அதாவது தேறிய ஏற்பாட்டில் முறையே 24 சதவீதமாகவும் 15 சதவீதமாகவும் காணப்பட்டன. விபரம் பின்வருமாறு.

| தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடுகள் | பயன்பாடுகள் | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 171 | 4,778,491,503 | 3,625,035,135 | 1,153,456,368 | 24 |
| 214 | 26,840,650,000 | 22,752,555,000 | 4,088,095,000 | 15 |
| மொத்தம் | 31,619,141,503 | 26,377,590,135 | 5,241,551,368 | 17 |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

அமைச்சின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானவை | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 17101 | 4,500,000 | 2,473,725 | 2,300,000 | 2,847,318 | 18,000,000 | 12,235,297 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புக் கணக்கின் மீதி ரூபா 22,266,528 ஆக இருந்தது.

## 2 ஆவது பகுதி

---

**ஒவ்வொரு தலைப்பிற்கும் உரிய விபரமான அறிக்கை**

---

### 1. தலைப்பு 171 – உயர் கல்வி அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

உயர் கல்வி அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்தோபர் 09 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும்

இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் உயர் கல்வி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும், இணக்கக் கூற்றும் இங்கே (அ) தொடக்கம் (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.4 தொடக்கம் 1.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) மிகைப்படுத்தல்கள்

ஒரு மூலதன செலவின விடயத்திற்கும் 19 மீண்டெழும் செலவின விடயங்களுக்கும் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் முறையே ரூபா 437,077,279 இனாலும் ரூபா 1,976,222 இனாலும் ஆக ரூபா 439,053,501 இனால் மிகையாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### (ஆ) பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 13 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 579,320,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ii) 11 செலவின விடயங்களுக்காக மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 50 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(iii) ‘‘சுற்றாடல் மாசடைவதைக் கட்டுப்படுத்துதல் மற்றும் பள்ளக் காணிகளுக்கு மண் நிறைத்தல் வேலைத்தளங்களில் சுற்றாடல் மீளமைப்புத் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்வதற்கான செயற்திட்டம்’’ இதற்காக ரூபா 10 மில்லியன் நிதி ஏற்பாடு

ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக இலங்கை சுங்கத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 10,281,323 தொகையான வரித்தொகை 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. ‘‘அறிவுள்ள சமூகத்திற்கான கல்விச் செயற்திட்டத்தின்’’ முதலீடாக செலவின விடயத்தில் மாற்றப்பட்டு ஒதுக்கீட்டுக் கணக்கில் பதியப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், ஆரம்பிக்கப்படாத செயற்திட்டத்திற்காக செலவுகளைப் பதிவிடல் உரிய செயற்திட்டத்தின் செலவினம் மேற்கூறப்பட்ட பெறுமதியில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட உள்நாட்டு நிதியத்திற்கான தேறிய ஏற்பாட்டை விஞ்சி ரூபா 281,323 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**(இ) பொது வைப்புக் கணக்கு**

2 வருடங்களை விஞ்சிய ரூபா 403,244 கூட்டுத்தொகையான 04 வைப்புகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்**

விடய இல. 17101 இன் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 307,980 ஆக இருந்ததுடன் அந்நிலுவை மீதியினை அறவீடுசெய்வதற்கு அமைச்சு தவறியிருந்தது.

## 1.4 செயற்திட்ட அமுலாக்கலின் நலிவுகள்

### 1.4.1 21 ஆம் நூற்றாண்டின் உயர் கல்வி செயற்திட்டம்

இருபத்தோராம் நூற்றாண்டிற்கான உயர் கல்வி செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐக்கிய அமெரிக்க டொலர் 40 மில்லியனாக இருந்தது. சர்வதேச அபிவிருத்திச் சங்கம் மூலம் இந்த நிதியீட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பிரிவுகள் நான்காகும். செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2010 நவம்பர் 01 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு

தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி செயலாற்றல்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திரண்ட செலவினம் ரூபா 1,780,679,075 ஆக இருந்ததுடன் அது எதிர்பார்க்கப்பட்ட செலவினத்தில் 38 சதவீத நிதி செயல்முன்னேற்றத்தை அடையக்கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும் செயற்திட்டக்காலத்தில் 61 சதவீதம் முடிவடைந்திருந்தமையினால் செயற்திட்டத்தின் காலம் முடிவடையும் போது திட்டமிடப்பட்ட இலக்கை அடைய முடியாதுள்ள நிலைமை காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

| நிதி மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியீட்டத்திற்காக இணங்கப்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்காக பாதிடப்பட்ட நிதியேற்பாடு | நிதியத்தின் பயன்பாடு<br>2013 ஆம் ஆண்டின் போது பயன்படுத்தப்பட்ட நிதியம் | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்ட நிதியம் | | நிதியேற்பாட்டின் சதவீதமாக பயன்படுத்தப்பட்ட நிதியம் |
|---|---|---|---|---|---|---|---|
| | யூ.எஸ். டொலர். மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | யூ.எஸ்.டொலர். மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| ச.அ.ச | 40 | 4,650 | 890 | 841.87 | 14.06 | 1,780.68 | 38 |
| மொத்தம் | 40 | 4,650 | 890 | 841.87 | 14.06 | 1,780.68 | |

(ஆ) கூறுகளின் செயலாற்றல்

செயற்திட்டத்தின் கூறுகளின் நிதி செயலாற்றல் திருப்திகரமான செயல்முன்னேற்றத்தைக் காண்பிக்கவில்லை. விபரம் பின்வருமாறு.

| விபரம் | 2013.12.31 இல் உள்ளவாறு திரண்ட நிதியேற்பாடு | 2013.12.31 இல் உள்ளவாறு திரண்ட செலவினம் | 2013.12.31 இல் உள்ளவாறு திரண்ட நிதியேற்பாட்டின் சதவீதமாக திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| ------------- | ------------------- | ------------------ | ------------------ |
| | ரூபா | ரூபா | |
| உயர் கல்விப் பிரிவிற்காக தேசிய உயர் கல்வி வசதிவாய்ப்புக்களை அபிவிருத்தி செய்தல் | 16,650,000 | 2,709,470 | 16 |
| ஓட்டுமொத்த கல்விப் பிரிவிற்காக நிலைமை உறுதிப்படுத்தல் இயந்திரத்தை ஸ்தாபித்தல் | 80,656,000 | 29,264,998 | 36 |
| நிலைமை மற்றும் புத்தாக்க மானியம் (QIG) | 666,797,363 | 123,013,581 | 18 |
| இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவக நிகழ்ச்சித்திட்டத்தை நவீனப்படுத்தலும் முகாமை செய்தலும் | 231,900,000 | 37,108,796 | 16 |

(இ) கற்பித்தல் மற்றும் கற்றல் நிலைமையை முன்னேற்றுதல்

---------------------------------------------------------------------------------------------

கற்பித்தல் மற்றும் கற்றல் நிலைமையை முன்னேற்றும் பிரிவின் கீழ் உயர் கல்வி தொடர்பான பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்வதற்காக சகல பல்கலைக்கழகங்களுக்கும் பல்கலைக்கழக அபிவிருத்தி மானியமாக 4 வருடங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியளவில் பயன்படுத்த வேண்டிய ஆகக் குறைந்த இலக்கு 75 சதவீதமாக இருந்த போதிலும் ஆறு பல்கலைக்கழகங்களினால் 2013 ஆம் ஆண்டின் இறுதியளவில் 40 சதவீதத்திற்கு குறைவான நிதியேற்பாடே பயன்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே வெளிவாரி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் 04 வருடங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் 02 வருட இறுதிவரையில் 40 சதவீதமான குறைந்த அளவே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) பௌதீக செயலாற்றல்

----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உயர்கல்வி பிரிவிற்காக நிறுவனமயப்படுத்தப்பட்ட பிரிவின் கீழ் பாடநெறிகளில் தேசிய தகைமையுடன் அபிவிருத்தி செய்தல் மற்றும் இலங்கையின் உயர் கல்விப் பிரிவில் நிறுவனங்களுக்கான கட்டமைப்பைத் தயாரித்தல் தொடர்பான செயற்பாட்டிற்காக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 2,709,470 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அச்செயற்பாடுகள் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இலங்கையின் தகைமையுடனான பெயரில் தயாரிக்கப்பட்ட சுற்றுநிருபம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தினால் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தை (SLIATE) நவீனமயப்படுத்துவதற்கான செயற்திட்டத்தின் மூலம் 2013 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட தலைமைத்துவ மற்றும் நிலைமை அபிவிருத்தி நிலையத்தை (LQDC) ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கை 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) மனிதவள அபிவிருத்தி, ஒழுங்குபடுத்தலும் மதிப்பீடும், கல்வி மற்றும் தொடர்பாடல் பிரிவின் கீழ் 05 பல்கலைக்கழகங்களில் மானியங்களைப் பெற்ற 06 விரிவுரையாளர்களினால் மீளாய்வாண்டின் போது கல்வி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் அச்செயற்பாடுகள் 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டதாரி மாணவர்களின் திறனை உயர்வடையச் செய்வதற்காக ரூபா 8,543,252 கிரயமான நிகழ்ச்சித்திட்டம், உரிய பரிசோதனைக்காக தகைமை பெற்ற 7,471 பட்டதாரி மாணவர்களில் 2,177 பட்டதாரி

மாணவர்கள் மாத்திரம் வாய்மூலப் பரீட்சைக்கு (Speaking Testing) தோற்றியிருந்ததுடன் 1,699 பட்டதாரி மாணவர்கள் மாத்திரம் 4 கட்டங்களையும் பூர்த்தி செய்திருந்தனர்.

(உ) சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

செயற்திட்டத்தில் சேவைக்காலம் மூன்று வருடங்கள் பூர்த்தியடைந்த பின்னர் சேவையிலிருந்து விலகிய 4 ஊழியர்களுக்கு ரூபா 386,818 கூட்டுத்தொகையான பணிக்கொடைக் கொடுப்பனவுகள் 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 1.4.2 தொழில்நுட்பக் கல்வியை அபிவிருத்தி செய்தல் மற்றும் நாளதுவரையாக்குவதற்கான செயற்திட்டம்

---

தொழில்நுட்பக் கல்வியை அபிவிருத்தி செய்தல் மற்றும் நாளதுவரையாக்குவதற்கான செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் மட்டக்குளி மற்றும் லபுதுவ உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் தொழில்நுட்பக் கல்வியை அபிவிருத்தி செய்தல் மற்றும் நாளதுவரையாக்குதல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் யூரோ 27.6 மில்லியனாக (ரூபா 4,307.07 மில்லியன்) இருந்தது. செயற்திட்டத்தின் செயற்படுதன்மை 2008 திசெம்பர் 31 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி பூர்த்திசெய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டில் செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 307,108,910 தொகையாக இருந்ததுடன் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திரண்ட செலவினம் ரூபா 3,442,926,331 ஆக இருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 4,435,730 தொகை செயற்திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படாது அமைச்சிற்கு மீள அனுப்பப்பட்டிருந்தது.

(ஆ) 2011 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட வெளிநாட்டு உதவிக்கடன் மற்றும் வெளிநாட்டு உதவி மானிய ஏற்பாடுகளிலிருந்து நூறு சதவீதமும், வெளிநாட்டு உதவி

தொடர்பான உள்நாட்டு நிதியத்திலிருந்து 74 சதவீதமும் 2011 ஆம் ஆண்டின் இறுதியில் எஞ்சியிருந்தது.

(இ) செயற்திட்டத்தின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட செயற்திட்ட நிதியத்தை பயன்படுத்தி குறிப்பிட்ட காலப்பகுதியில் செயற்திட்டத்தின் நிதி மற்றும் பௌதீக நோக்கங்களுக்கான இலக்கிடப்பட்ட காலாண்டு மற்றும் அரையாண்டு ரீதியான விரிவான ஒட்டுமொத்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செயற்திட்டக்காலம் முடிவடைந்திருந்த போதிலும் செயற்திட்டத்திலிருந்து கிடைத்த ரூபா 2,039,485,875 தொகையான உபகரணங்கள் இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிராததுடன் ரூபா 772,987 தொகையான மீதி 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செயற்திட்ட வங்கிக் கணக்கில் காணப்பட்டது.

### 1.4.3 இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் கட்டம் 1–பீ

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினதும் அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்திற்குமிடையே 2011 திசெம்பர் 20 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட 836 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,812 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 1,421 மில்லியனுக்குச் சமனான குவைத் தினார் 03 மில்லியனை நிதியீட்டம் செய்வதற்கு அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியம் இணங்கியிருந்தது. இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 391 மில்லியனாகும். செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2012 செப்தெம்பர் 01 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யத் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 29.95 மில்லியன் செலவிடப்பட்டு 1.65 சதவீத நிதி செயல்முன்னேற்றம் அடையப்பட்டிருந்தது. பௌதீக செயல்முன்னேற்றம் பூச்சிய நிலையில் காணப்பட்டது.

### 1.4.4 செயற்திட்ட ஆரம்பித்தலில் தாமதம்

மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 306.7 மில்லியன் தொகையான பொறியியல் பீடத்தை ஸ்தாபித்தல் - கிளிநொச்சி மற்றும் சமூக அடிப்படையில் செய்யப்பட்ட வட மாகாண பெண்களை வலுப்படுத்துதல் என்ற இரண்டு செயற்திட்டங்கள் உயர் கல்வி அமைச்சினால் மீளாய்வாண்டின் போது ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது ரூபா 133.3 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடு இதுவரை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் பல்வேறு காரணங்களினால் அந்த செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.5 செயலாற்றல்

வருடாந்த கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க அமைச்சின் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

2013/2014 கல்வியாண்டிற்காக வழங்கப்பட்ட வெளிநாட்டு புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை 174 ஆக இருந்ததுடன் உள்ளபடியாக பெற்றுக்கொள்ளப்பட்ட புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை 147 ஆகும். இதன் பிரகாரம், கையேற்கப்படாத புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை 27 ஆகும். அது வழங்கப்பட்ட புலமைப்பரிசில்களின் எண்ணிக்கையில் 16 சதவீதம் மாத்திரமாகும்.

### 1.7 மனிதவள முகாமைத்துவம்

#### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 24 | 17 | 07 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 01 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 114 | 72 | 42 |
| (iv) | ஆரம்ப நிலை | 40 | 35 | 05 |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 06 | 05 | 01 |
| | மொத்தம் | 186 | 130 | 56 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 56 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

**(ஆ) ஏனைய தரப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட மனித வளங்கள்**

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தில் மூன்று அமையத் தொழிலாளர்கள் அந்த நிறுவகத்திலிருந்து விடுவிக்கப்படாது அமைச்சின் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## 2. தலைப்பு 214 – பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

---

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

---

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒதுக்கீட்டுக் கணக்கும், இணக்கக் கூற்றும் இங்கே (அ) இலுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 2.4 இல் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்கள்

2013 ஆம் ஆண்டிற்காக மூலதனச் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் 32 சதவீதமான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.4 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 62 | 38 | 24 |
| (ii) | மூன்றாம் நிலை | 21 | 21 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 156 | 98 | 58 |
| (iv) | ஆரம்ப நிலை | 50 | 43 | 07 |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 04 | 04 | - |
| | மொத்தம் | 293 | 204 | 89 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 89 வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆணைக்குழு தவறியிருந்தது.